**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.58/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.கலைவாணி |
| Father Name | திரு.அண்ணாமலை |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.02.2026.**

**2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நானும், மற்ற வாதிகளும் 1–ம் பிரதிவாதியின் பிள்ளைகள் என்றால் சரிதான். 2–ம் பிரதிவாதி என் சகோதரி. எங்கள் வழக்கில் சொல்லப்பட்டுள்ள இரண்டு அட்டவணை சொத்துகளில் முதல் அட்டவணை சொத்து நிலம் என்றால் சரிதான். 1–ம் அட்டவணை சொத்தில் நாங்கள் இந்த வழக்கில் பங்கு கேட்கவில்லை என்றால் சரிதான். 2–ம் அட்டவணை சொத்தில் எங்களுக்குரிய பாகத்தை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என் தந்தை அண்ணாமலை 1963–ம் ஆண்டு இந்திய இராணுவத்தில் பணியில் சேர்ந்தார். எப்போது ஓய்வு பெற்றார் என்று எனக்கு ஞாபகமில்லை. தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் என் தந்தை எப்போது பணிக்கு சேர்ந்தார் என்று ஞாபகமில்லை. நான் செவிலியர் பட்டயப் படிப்பு படித்துள்ளேன். 2–ம் பிரதிவாதி பள்ளிப் படிப்பை படிக்கவில்லை என்றால் சரிதான். என் தந்தை இந்திய ராணுவத்தில் பணிபுரிந்த போதும், தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் பணிபுரிந்த போதும் எவ்வளவு மாத சம்பளம் பெற்று வந்தார் என்பதை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்களை பராமரித்து, படிக்க வைப்பதற்கு என் தந்தைக்கு எப்போதும் போதுமான வருமானம் இருந்ததில்லை என்றால் சரியல்ல. என் தந்தைக்கு போதிய வருமானம் இல்லாததால் என் தாயாரான இறந்து போன 1–ம் பிரதிவாதி பால் மாடுகள் வைத்து பால் கறந்து விற்பனை செய்தும், வீட்டிலேயே பெட்டிக்கடை வைத்து சம்பாதித்தும் எங்களை பராமரித்து படிக்க வைத்து திருமணம் செய்து வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள இரண்டு சொத்துகளுமே என் தாயாரின் வருமானத்தில் அவர் பெயரிலேயே வாங்கப்பட்ட சொத்துகள் என்றால் சரியல்ல. என் தந்தை மற்றும் தாயார் பெயரில் எவ்வளவு தொகை வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டிருந்தது என்று என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். வழக்கு சொத்துகள் 1–ம் பிரதிவாதியான என் அம்மாவின் தனிப்பட்ட சொத்துகள் என்பதால் அவர் விருப்பப்படி யார் பெயருக்கும் அவற்றை எழுதிக்கொடுக்க அவருக்கு

உரிமையுள்ளது என்றால் என் தந்தையின் வருமானத்தில் வாங்கய சொத்துகள் என்பதால் என் அம்மாவிற்கும், எங்களுக்கும் அதில் பங்குள்ளது. 1–ம் பிரதிவாதியான என் அம்மா கடந்த 10 வருடங்களாக சிறுநீரகம் கோளாறு காரணமாக சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரிதான். அதற்கான செலவுகளை என் அம்மா தான் செய்து வந்தார் என்றால் அவருடைய பிள்ளைகள் அனைவரும் பணம் கொடுத்தோம். 2–ம் பிரதிவாதியான என் சகோதரி தான் என் அம்மாவை பராமரித்து செலவு செய்து வந்தார் என்றால் சரியல்ல. நானும், மற்ற 2 வாதிகளும் வேலைக்கு செல்வதால் எங்கள் அம்மாவை நாங்கள் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வேலைக்கு போகவில்லை. 1–ம் பிரதிவாதியான என் அம்மா 2–ம் பிரதிவாதியான என் சகோதரிக்கு எழுதி வைத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும் என்றாலும், நாங்கள் அந்த சொத்தில் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.